கால்நடை பராமரிப்புத் துறை சார்பில்

222 பணியாளர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜன.23-

கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் ரூ.16.88 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைத்து, ரூ.118.42 கோடி மதிப்பீட்டிலான புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, 126 இளநிலை உதவியாளர் மற்றும் 96 தட்டச்சர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.1.2026) தலைமைச் செயலகத்தில், கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் 16 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அதிநவீன உறை விந்து வங்கி, கால்நடை மருத்துவமனை, 4 கால்நடை மருந்தகங்கள், 2 கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி நிலையம், இணை இயக்குநர் அலுவலகம்,

2 ஒருங்கிணைந்த பண்ணைகள் மற்றும் தெருநாய்களுக்கான சிறப்பு கால்நடை மருத்துவ வளாகம் ஆகிய 12 கட்டடங்களை திறந்து வைத்து, 118 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 31 ஒருங்கிணைந்த கால்நடை பண்ணைகள் மற்றும் நவீன ஒருங்கிணைந்த இறைச்சி உற்பத்தி மற்றும் இறைச்சி பதப்படுத்தும் வளாகத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 126 இளநிலை உதவியாளர் மற்றும் 96 தட்டச்சர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கும் கால்நடைகளை நன்கு பராமரிப்பதற்காகவும், மேம்பட்ட தரமான மருத்துவ சிகிச்சை கால்நடைகளுக்கு அளித்திடவும் கால்நடை மருந்தகங்கள், கால்நடை மருத்துவமனைகள், உறை விந்து வங்கி மற்றும் கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி போன்ற பல்வேறு கட்டமைப்புகளை உருவாக்கி, கால்நடை பராமரிப்புத் துறை சார்ந்த கட்டிடங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, கால்நடைகளின் மேம்பாட்டிற்காக அரசு பல்வேறு திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது.

திறந்து வைக்கப்பட்ட கட்டடங்களின் விவரங்கள்

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மாவட்ட கால்நடை பண்ணையில் 6 கோடியே 6 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அதிநவீன உறை விந்து வங்கி கட்டடம் (Frozen Semen Lab);

தஞ்சாவூரில் 1 கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் அலுவலகக் கட்டடம்;

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியில் 90 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கால்நடை மருத்துவமனைக் கட்டடம்;

நீலகிரி மாவட்டம், தலைகுந்தாவில் 67 இலட்சத்து 49 ஆயிரம் ரூபாய் செலவிலும் மற்றும் அதிகரட்டியில் 67 இலட்சத்து 49 ஆயிரம் ரூபாய் செலவிலும், திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலத்தில் 58 இலட்சம் ரூபாய் செலவிலும் மற்றும் தூத்துக்குடி மாவட்டம், ஓசனூத்தில் 48 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள 4 கால்நடை மருந்தகக் கட்டடங்கள்;

தூத்துக்குடியில் 58 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் செலவிலும் மற்றும் பெரம்பலூரில் 50 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள

2 கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி (CBFD) நிலையங்கள்;

திருவள்ளூர் மாவட்டம், பண்டிக்காவனூரில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவிலும் மற்றும் சேலம் மாவட்டம், வாழப்பாடியில்

2 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள

2 ஒருங்கிணைந்த பண்ணைகள்;

இராணிப்பேட்டை மாவட்டம், கனியனூரில் 52 இலட்சம் ரூபாய் செலவில் தெருநாய்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை வசதிகளுடன் கூடிய சிறப்புக் கால்நடை மருத்துவ வளாகம்;

என மொத்தம் 16 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 12 கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

அடிக்கல் நாட்டப்பட்ட

கட்டடங்களின் விவரங்கள்

மாநிலத்தின் 31 மாவட்டங்களில் 88 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 31 ஒருங்கிணைந்த கால்நடை பண்ணைகள்;

செங்கல்பட்டு மாவட்டம், காட்டுப்பாக்கத்தில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன ஒருங்கிணைந்த இறைச்சி உற்பத்தி மற்றும் இறைச்சி பதப்படுத்தும் வளாகம்;

என மொத்தம் 118 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 32 கட்டடங்களுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

பணி நியமன ஆணைகள் வழங்குதல்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் கால்நடை பராமரிப்புத் துறையில் 126 இளநிலை உதவியாளர் மற்றும் 96 தட்டச்சர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக முதலமைச்சர் அவர்கள் 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், தலைமைச் செயலாளர .நா.முருகானந்தம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் என்.சுப்பையன், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் ச.பா.அம்ரித் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சென்னை, தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் நேற்று (22.01.2026) தொழில்நுட்பக் கல்வித் துறை மற்றும் அதன் கீழ் உள்ள கல்லூரிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வெளிப்படைத் தன்மையோடு நடத்தப்பட்ட பொது இடமாறுதல் கலந்தாய்வில் (General Transfer Counselling) 74 ஆசிரியர்கள் மற்றும் 55 ஆசிரியரல்லாப் பணியாளர்களுக்கு இடமாறுதலுக்கான ஆணைகளை வழங்கினார்.

வீரவணக்க நாளை முன்னிட்டு - அமைச்சர் மா.சுப்பிரமணியன்

மொழிப்போர்த் தியாகி விருகம்பாக்கம் அரங்கநாதன் நினைவிடத்தில் அஞ்சலி!

விருகம்பாக்கம் தொகுதி, கலைஞர்நகர் வடக்கு-தெற்கு பகுதி தோழர்களுக்கு மு.ராசா – கே.கண்ணன் வேண்டுகோள்!

சென்னை, ஜன. 23-

மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாளை முன்னிட்டு, அன்னைதமிழ் காக்க, அஞ்சா மன உறுதியுடன், தம் தேக்குமர தேகத்தை வெந்தழலுக்கு இறையாக்கி, மறையாமல் மறத்தமிழர் நெஞ்சில் மறவாமல் வாழும் வீரதமிழ்மறவர்களில் ஒருவராய் தீந்தமிழ் காத்த தியாகதிபமாக வாழும், மொழிப்போர் தியாகி விருகம்பாக்கம் ஓய். அரங்கநாதன் அவர்கள் நினைவிடத்தில், வருகிற 25.01.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில், காளியம்மன் கோவில் தெரு விநாயகம் தெருவில் உள்ள தியாகி அரங்கநாதன் அவர்கள் சமாதியில் சென்னை தெற்கு மாவட்ட செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்த உள்ளார்கள்.

விருகம்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சகோதரர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன் மாநில வர்த்தகரணி செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் ஆகியோர் கலந்து கொள்ளும் இந்நிகழ்வில், விருகம்பாக்கம் தொகுதி, கலைஞர்நகர் வடக்குதெற்கு பகுதிக்குட்பட்ட, பொதுக்குழு, மாவட்ட, பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், இளைஞரணி, மாணவரணி, வர்த்தகரணி, வழக்கறிஞரணி, தொண்டரணி, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்று சூழல் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவரணி, பொறியாளர் அணி, ஆதிதிராவிடர் நல அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, தொழிலாளர் அணி, சிறுபான்மையினர் நல அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுனர் அணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி மாவட்ட பகுதி நிர்வாகிகள் மற்றும் கழக முன்னணியினர் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளமாறு பகுதிச் செயலாளர்கள் மு.ராசா, கே.கண்ணன் ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

திரு.வி.க.நகர் வார்டு–74 க்குட்பட்ட பகுதிகளில்

ரூ.1.07 கோடி மதிப்பில் புதிய பல்நோக்கு மையக் கட்டடம்!

மேயர் பிரியா ஆய்வு மேற்கொண்டார்!

சென்னை,ஜன.23-

பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-74க்குட்பட்ட ஓட்டேரி, பிரிஸ்லி நகர் முதல் தெருவில் மூலதன நிதியில் ரூ.40 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் பல்நோக்கு மையக் கட்டடப் பணியினை நேற்று மேயர் திருமதி ஆர். பிரியா (22.01.2026) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஓட்டேரி, பாஷ்யம் 2வது தெருவில் மூலதன நிதியில் ரூ.67 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் 2 பல்நோக்கு மையக் கட்டடப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணியினை விரைந்து முடித்துப் பயன்பாட்டிற்குக் கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு ஆலோசனை வழங்குகிறார்!

திருவல்லிக்கேணி பகுதி வட்டக் கழகச் செயலாளர்கள் - பகுதி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

பகுதிக் கழகச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் அறிக்கை!

சென்னை, ஜன.23 -

திருவல்லிக்கேணி பகுதிக் கழகச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் எம்.சி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை மேற்கு மாவட்டம், திருவல்லிக்கேணி பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (23.01.2026 - வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணியளவில், எண். 28/20, கஜடி பேகம் தெரு, இராயப்பேட்டை உள்ள பகுதிக் கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு பகுதிக் கழக அவைத் தலைவர் ம.தயாநிதி தலைமை வகிக்கிறார்.

இக்கூட்டத்தில் வீ.பி. பொன்னரசு, ஆர்.என்.துரை, அ.சுபேர்கான், வி.என்.ராஜன், ப.பிரகாஷ், எ.விஜயராஜ், இ.இளம்பாரதி, கமலா செழியன், ரவி ராஜ்குமார், எம்.கே. ஆனந்த் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

எனவே கூட்டத்திற்கு வட்டக் கழகச் செயலாளர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: -

கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு திருவல்லிக்கேணி பகுதிக் கழகச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.